நாள். 27.02.2018

செய்தி வெளியீடு எண். 119

## அரசு பொதுத்தேர்வு சார்ந்த புகார்களுக்கு இலவச தொலைப்பேசி எண். 1077 திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு

01.03.2018 முதல் அரசு பொதுத்தேர்வில் திருவள்ளூர் மாவட்டத்தில் 12-ம் வகுப்பு மாணவ, மாணவிகள் 44,125 நபர்கள் தேர்வு எழுதவுள்ளனர், 11-ம் வகுப்பு மாணவ, மாணவிகள் 45,927 நபர்கள் தேர்வு எழுதவுள்ளனர். இத்தேர்வாளர்களுக்கு 113 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய சிறைச்சாலையில் தனித்தேர்வு மையம் அமைக்கப்பட்டு, இம்மையத்தில் 116 சிறைவாசிகள் தேர்வு எழுதவுள்ளனர். 17 வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு கட்டுக்காப்பு மையத்திலும் பள்ளி தலைமையாசிரியர் ஒருவரும், மூத்த முதுநிலை ஆசிரியர் ஒருவரும் ஆக மொத்தம் 68 கட்டுக்காப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டு, 113 தேர்வு மையங்களிலும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களை முதன்மை கண்காணிப்பாளர்களையும், மூத்த முதுநிலை ஆசிரியர்களை துறை அலுவலர்களாக 400 பேர் தேர்வு மையங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளன. கூடுதலாக முதன்மை கண்காணிப்பாளரும், கூடுதல் துறை அலுவலர்களும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர். வினாத்தாள்களை மையங்களுக்கு கொண்டுச்செல்ல 31 வழித்தடங்களை அமைக்கப்பட்டு, 62 அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வு மையங்களில் தடையில்லா மின்சாரமும், சீரான போக்குவரத்தும் மற்றும் சுகாதார குடிநீர் வசதிகளை துறைச்சார்ந்த அரசு அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

ஒவ்வொரு தேர்வு மையங்களிலும் 20 தேர்வாளர்களை கொண்ட ஓர் அறைக்கு, ஓர் அறை கண்காணிப்பாளர் வீதம் 2,306 அறை கண்காணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்கள் ஒழுங்கின செயல்களை தடுக்கும் பொருட்டு 74 பறக்கும் படை உறுப்பினர்களும், 250 நிரந்தர படை உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இது தவிர மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்படும் வருவாய்த்துறை மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் தேர்வு மையங்களில் திடீர் பார்வை மேற்கொள்வர்.

தேர்வர்கள் தேர்வு எழுதும்போது, தேர்வறைக்குள் மொபைல் போன், கால்குலேட்டர், வாட்ச், ஷு, பென்டிரைவர், பெல்ட் மற்றும் பர்ஸ் போன்ற பொருட்களை தேர்வறைக்குள் எடுத்துச்செல்ல அனுமதி கிடையாது என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**